1984 பிப்ரவரி 15]

(8) தமிழ் இலக்கியத்தில் காணப்படும் பெயர்களின் கலைக் களஞ்சியம்;

(9) பல்வகை அகர முதலிகள்;

(10) புதிய படைப்பிலக்கியங்கள்;

(11) கலை நுணுக்க நூல்கள்;

(12) பிற அனைத்துத் துறை நூல்கள் என்ற வகையில் இதிலே விடுபட்ட நூல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, எல்லா நூல்களுக்கும் வாய்ப்பு இருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: மொத்தமாக 29 நூல்களுக்கு நிதி உதவி அளிப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த 29 நூல்களை தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுத்தார்களா அல்லது குழு அமைத்து, சிறந்தவைகளைத் தேர்ந்தெடுத்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, குழு அமைத்துத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அமைக்கப்பட்டிருக்கிற குழுவில் தமிழ் வளர்ச்சி இயக்குநர், திரு. வெள்ளைவாரணனார், திரு. நாரண துரைக்கண்ணன், திரு. க. பெருமாள், திருமதி பு. பா. இராஜராஜேஸ்வரி, திரு. தில்லை கோவிந்தன், திருமதி தமிழரசி ஆகியவர்கள் அடங்குவர்.

தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கான நிதியுதவி.

24—* வினா எண் 19025—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு நிதியுதவி அளிக்கத் தகுதி உள்ளதா என்று அறிய பல்கலைக் கழக மானியக் குழு ஒன்று பல்கலைக் கழகத்திற்கு வந்து ஆய்வு செய்ததா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) கமிட்டியில் அங்கம் வகித்தவர் யார், யார்?

(ஈ) கமிட்டி செய்த சிபாரிசு என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ). இதுபற்றிய விவர அறிக்கை ** அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

** 154-155 ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்று உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, ஒரு மாநில அரசு ஒரு பல்கலைக்கழகத்தை ஆரம்பித்துவிட்டு மத்திய அரசினுடைய நிதி உதவியைக் கோருகிறபோது, அவர்கள் ஏதோ எஜமானர்களைப்போல் விதிப்படி ஆரம்பித்திருக்கிறார்களா என்றெல்லாம் பார்ப்பது—வேண்டுமானால் இங்கிருந்து அனுப்பப்படுகிற அறிக்கையைப் பார்த்துவிட்டு நிதி உதவி அளிக்கவேண்டுமே தவிர-ஏதோ வறட்சி அல்லது வெள்ளப்பணிகளைப் பார்ப்பதுபோல் இப்படிப் பார்ப்பது சரிதானா? இதுபற்றி மத்திய அரசிடம் நம் அரசு தன்னுடைய கருத்தைச் சொல்லியுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இதை ஒரு முறையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது தமிழ் பல்கலைக் கழகத்துக்காக மட்டும் ஏற்படுத்தப்பட்டதல்ல. எங்கே பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டாலும் பல்கலைக்கழக மானியக் குழு இப்படி ஒரு கமிஷனை அனுப்பி அவர்களுடைய நிபந்தனைகள் எல்லாம் நடத்தப்பட்டு வருகிறதா என்று பார்த்து அதற்குப் பிறகு தான் அவர்கள் நிதி உதவி அளிக்க முன்வருவார்கள். அதற்காக அவர்கள் வருகிறார்கள். குறிப்பாக மாநில அரசு இரண்டு கோடி ரூபாய் அளவிற்காவது அதில் முதலீடு செய்திருக்க வேண்டும் என்பது ஒரு அடிப்படை, அவையெல்லாம் நேரில் பார்த்தால்தான் தெரியும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அப்படி நமக்கு அளிக்கப்படவிருக்கிற நிதி உதவி எவ்வளவு கிடைக்கும் என மாநில அரசு தெரிந்துகொண்டுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே' அதற்கெல்லாம் ஒரு எல்லை கிடையாது. நாம் திட்டங்களை அனுப்பும்போது குறிப்பிட்ட திட்டங்களை அவர்கள் ஏற்றுக் கொண்டால் முழுப்பணம் அல்லது பாதிப்பணம் தருவார்கள். அவர்கள் நிதி உதவி கிடைக்கும். நமது ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ஏற்ப நாம் பெற்றுக்கொள்வோம்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற பதிலில், பல்கலைக் கழக மானியக் குழு சட்ட பிரிவு 12(ஏ)-ன் கீழ் தகுதியானது என அறிவித்து, தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டத்தில் திருத்தங்கள் செய்தபின்னரே பொதுவான நிலையமேம்பாட்டுத்திட்டங்களுக்கு நிதி உதவி கிடைக்குமெனவும் தெரிவித்துள்ளது என்று கூறியிருக்கிறார்கள். அப்படியானால் தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டம் வகுக்கப்படும் போது பல்கலைக் கழக மானியக் குழு சட்டப் பிரிவு ஆராய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லையா? அல்லது அதற்கு உடன்பாடான முறையில் நம்முடைய சட்ட திட்டங்கள் இருக்க வேண்டும் என்பதைஅரசாங்கம் கருதாமல் சட்டம் வகுக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது பல்வேறு பல்கலைக் கழக சட்ட திட்டங்கள் மாற்றப் பட்டிருக்கின்றன. புதிது புதிதாகக் கொண்டுவரப்படுகின்றன.

1984 பிப்ரவரி 15]

ஒரு பல்கலைக் கழகத்தினுடைய சட்டதிட்டங்கள் இன்னொரு பல்கலைக் கழக சட்டதிட்டங்களைப் போன்று இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் பொதுவான சில கருத்துக்களை பல்கலைக் கழக மானியக் குழு சொல்கிறார்கள். தமிழ்ப் பல்கலைக் கழக சட்ட திட்டங்களை நாம் வரையறுக்கும்போது அதன் குறிக்கோள் ஆகியவற்றை நம் நோக்கத்தின்படி நாம் வரையறை செய்து அந்தச் சட்ட திட்டங்களை கொண்டு வந்திருக்கிறோம். அதில் சில மாற்றங்களை செய்யவேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். கருதி, அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிபந்தனைகளையெல்லாம் நாம் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றிய பிறகு கட்டடங்கள் சம்பந்தப்பட்ட மானியங்கள் தருவார்கள். அதற்கு முன்னால் திட்டங்கள் சம்பந்தப்பட்ட மானியங்களைத் தர முன்வந்திருக்கிறார்கள். ஆக, அவர்கள் நிதி உதவி தர ஒத்துக்கொண்டு விட்டார்கள்.

திரு. ந. சிவஞானம்: தலைவர் அவர்களே, தமிழ் பல்கலைக் கழகத்துக்கு எவ்வளவு நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது என அறிய விரும்புகிறேன். அடுத்தபடியாக, விரைவாக கட்டடங்கள் கட்டிக் கொள்ள—இப்போது க்வார்ட்டேர்ஸ் மட்டும்தான் கட்டப்பட்டிருக்கின்றன—கட்டடங்கள் கட்ட முனைப்பான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது அதனுடைய முழு விவரங்கள் என்னிடம் இல்லை. ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய் பக்கம் நம் அரசு பணம் தந்துள்ளது. நிர்வாகக் கட்டடம் பற்றிய வரைபடத்தை நாம் பார்த்து நம்முடைய தமிழ்க் கலை, கலாச்சாரத்திற்கேற்ப அவை இருக்க வேண்டும் என்று சொல்லி அதில் ஒரு மாறுதல் செய்யவேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். அப்படி மாறுதல் செய்து அது ஒத்துக்கொள்ளப்பட்ட பிறகு அந்தக் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

மாலைநேர சட்டப்படிப்பை மீண்டும் துவக்கும் திட்டம்.

(*25—வினா எண் 21111)—திரு. செ. செம்மலை மற்றும் திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாலைநேர சட்டப்படிப்பை மீண்டும் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்மிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ): 1983–84 ஆம் ஆண்டிலிருந்து மாலை நேர சட்டப்படிப்பு மீண்டும் துவங்கத் தேவையான ஆணைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டு விட்டன.